# The Community of Vedar in Batticaloa
# மட்டக்களப்பில் வேடர் சமூகம்

---


**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையில் வாழும் இனங்களுள் ஆதிக் குடிகளாக வேடர்கள் காணப்படுகின்றனர். சாதாரண மனித வாழ்க்கைக்கு தம்மைத் தயார்படுத்திக்கொள்ளாது வேட்டையில் ஈடுபட்டுக் காடுகளில் வசிப்போர் வேடர்களாவர். அண்மைக் காலங்களில் இவர்கள் சாதாரண மனித வாழ்க்கைக்குத் தம்மைப் பழக்கமாக்கிக்கொண்டு இலங்கையிலுள்ள ஏனைய சமூகத்தினரைப் போன்று வாழும் நிலைக்கு மாறி வருகின்றனர். இருப்பினும் வாகரையில் காட்டு வாழ்க்கையை பழக்கமாக்கிக் கொண்டு வாழ்வோரும் உள்ளனர். மட்டக்களப்பில் வேட வம்சாவழியினர் வாழும் இடங்களாக பால்சேனை, வாகரை, பனிச்சங்கேணி, காயகங்கேணி, இறால் ஓடை, வாகனேரி, கோங்கனை, முறுத்தானை, பொண்டுகள் சேனை, சித்தாண்டி, கற்குடா, வாழைச்சேனை, கிரான், சந்திவெளி, களுவன்கேணி, திராய்மடு, முகத்துவாரம், வந்தாறுமூலை, பழுகாமம், கொக்கட்டிச்சோலை, கட்டுமுறிவு, நாசிவன்தீவு என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் வேட சமூகம் பற்றிய தடயங்களை இனங்காண்பது இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வு முறையானது வரலாற்றடிப்படையில் அமைந்துள்ளது. ஆதிக் குடிகளான வேடரின் அவர்களின் சமூக வழமைகள், வாழ்வியல் மாற்றங்களை அறிந்துகொள்வதை நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. தம்மை அடையாளம் காணமுடியாதளவிற்கு ஏனைய குடிகளோடு தம்மை இணைத்துக்கொண்டு வாழ்வதை அறிதல் ஆய்வின் முக்கிய குறிக்கோளாகும். கள ஆய்வை முதல்நிலைத் தரவாகக் கொண்டும் நூல்கள், கட்டுரைகள், இணையத்தள தகவல்களை இரண்டாம்நிலைத் தரவுகளாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்புப் பிரதேசமானது பல்லினத்தவர்கள் இணைந்து வாழும் பிரதேசமாகக் காணப்பட்டாலும் இப்பிரதேசத்தின் பூர்வீகக் குடிகளாக வேடர்களே வாழ்ந்துள்ளமைக்கு இன்றும் சில பிரதேசங்களில் வாழ்கின்ற வேட வம்சாசழியினர் சான்றாகும். அவர்களது வழிபாட்டுச் சடங்கு முறைகளும், மட்டக்களப்பு பிரதேசத்தில் காணப்படுகின்ற புகழ்பெற்ற ஆலயங்கள் பலவற்றின் பூர்வீக வரலாறுகளும், அங்கு நடைபெறும் வேடர்களுடன் தொடர்பான சடங்கு முறைகளும் சான்றுகளாகும். மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஏனைய சாதியரிடையே பல குடிகள் காணப்படுவதைப்போன்று வேடர்களிடையேயும் சில குடிவகைகள் இனங்காணப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடிக்கும் ஒவ்வொரு தெய்வம் முக்கியத்துவப்படுத்தப்பட்டாலும் ஏனைய குடிகளுக்கான பணிகளும் காணப்பட்டமை நோக்கத்தக்கது.

வேட இனமென்று தம்மை அடையாளம் காணமுடியாதளவிற்கு ஏனைய குடிகளோடு தம்மை இணைத்துக்கொண்டு கலப்புற்று வாழ்கின்றனர். எனினும் முறுத்தானை, பால்ச்சேனை, பொண்டுகள் சேனை, காயங்கேணி, கோதாரிச்சேனை போன்ற இடங்களில் வாழ்பவரிடையே இன்றும் வேடச்சாயலின் பண்புகளைக் காணமுடிகின்றது.


அருஞ்சொற்பதங்கள்: மட்டக்களப்புத் தேசம், வேடர்கள், பூர்வீக குடிகள்

## 1. அறிமுகம்

இலங்கையின் பூர்வீக குடிகளாகக் கூறப்படும் வேடர்கள் பற்றிய செய்தியை அறிந்துகொள்ள மகாவம்சம், நாடுகாட்டு பரவணிக் கல்வெட்டு, சாதித் தெய்வக் கல்வெட்டு, குலவிருதுக் கல்வெட்டு முதலியவற்றில் வேடர் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இயக்கர் நாகர் என்போருக்கு அடுத்த நிலையில் இன்றும் சில இடங்களில் வாழ்வோரான வேடரே மட்டக்களப்பின் புராதன சமூகத்தினரெனக் கொள்ளமுடியும் (சிவராம்.சி., ‘‘வாகரையில் வேடுவர்கள்’’ 2010:16).

இலக்கிய வகையைச் சேர்ந்த நாடுகாட்டு பரவணிக் கல்வெட்டு மத்திய காலப்பகுதியில் தமிழரிடையே வளர்ச்சியடைந்திருந்தது. நாடுகாட்டுப் பற்றில் வாழ்ந்த வேட தலைவர்கள் பற்றிய விபரங்கள் காணப்படுகின்றன. வேடர்கள் காடு வெட்டும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டார்கள் எனக் குறிப்பிடகின்றது. இவர்களுக்கு காடியன் என்ற சிறு பதவி வழங்கப்பட்டிருந்தமை பற்றியும் செல்லாப்பற்று வேடர் பற்றிய குறிப்பும் காணப்படுகின்றது (நடராசா.F.X.C., 1980:11).

மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் குலவிருதுக் கல்வெட்டு பகுதியில் ‘‘நாணி வில்லம்பு நாட்டிலுள்ள மேலார்க்கு’’ என்ற குறிப்பும் சாதித் தெய்வக் கல்வெட்டில் ‘‘வேடருக்குக் கன்னிகளாம்’ என்ற குறிப்பும் காணப்படுகின்றது. எனினும் சாதிகள் பற்றிய குறிப்பில் வேடர்கள் பற்றிய தகவல்கள் குறிப்பிடப்படவில்லை. அதாவது சிறைக்குள் ஊழியம் செய்யும் சாதிகளில் வேடர் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. இதன் மூலம் அவர்கள் தனித்துவமான சாதியினராக இனங்காணப்பட்டள்ளமை தெளிவாகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தே 1827 இல் வெளியிடப்பட்ட முதலாவது சாதிவாரிக் கணக்கெடுப்பில் மட்டக்களப்புத் தேசத்தில் தனித்துவமிக்க வேடர்களாக தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை 169 என வெல்லவூர்க்கோபாலின் மட்டக்களப்புத் தேசம் என்ற நூல் குறிப்பிடுகின்றது (வெல்லவூர்க்கோபால் 2005:50). சேர். ஜேம்ஸ். ரேனற் 1859 இல் வெளியிட்ட Ceylon Vo II எனும் நூலின்படி இலங்கைத்தீவு முழுவதிலுமுள்ள வேட இனத்தவர் எண்ணிக்கை ஏறக்குறைய 8000 ஆகுமெனக் குறிப்பிடுகின்றார் (வாகரைவாணன் 2011:109).

வவுணதீவுப் பிரதேசத்தில் கிரந்தன்வெட்டிய பகுதியில் ப.புஷ்பரட்ணம் மேற்கொண்ட ஆய்வில் 1700 வருடங்களுக்கு முன்னர் செறிவான குடியிருப்புக் கொண்ட பிரதேசமாகக் காணப்பட்டதை அங்கு காணப்படுகின்ற மலையிலுள்ள குகைக்குடியிருப்புக்களை ஆதாரமாகக் கொண்டு வேட குகைக் குடியிருப்புக்களென எடுத்துக்காட்டுகின்றார் (புஷ்பரட்ணம்.ப., ‘‘மட்டக்களப்பில் வேடுவர்களின் குகைக் குடியிருப்புக்கள்’’ 2013:15).

வேடர்களின் எண்ணிக்கையை மேல்வருமாறு காட்டலாம்.

| **ஆண்டு** | **வேடர்களின் எண்ணிக்கை (ஆயிரங்களில்)** |
|---|---|
| 1881 | 2.2 |
| 1891 | 1.2 |

| | |
|---|---|
| 1901 | 4.0 |
| 1911 | 5.3 |
| 1921 | 4.5 |
| 1931 | 3.2 |
| 1946 | 2.4 |
| 1953 | 0.8 |
| 1963 | 0.4 |

(Source – Department of Census and Statistics)

1881- 1963 தனித்துவமான இனமாக அடையாளங் காணப்பட்ட வேடர்கள் 1963 ஆம் ஆண்டுக்குப் பின்னரான கணக்கெடுப்பில் தனி இனமாக அடையாளங் காணப்படவில்லை. வேடர்கள் ஏனைய இனங்களுடன் கலப்புற்றுள்ளமையை அறியலாம்.

## 2. ஆலய வழிபாடுகளுடனான தொடர்பு

மட்டக்களப்பில் காணப்படுகின்ற ஆலய நடைமுறைகளிலும் வழிபாட்டுத் தன்மையிலும் வேடர்களின் வழக்காறுகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம், கோவில் போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயம், சித்தாண்டி, கோவில்போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயம், வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயம், மண்டூர் ஆலயம் போன்ற மட்டக்களப்பின் புகழ்பெற்ற திருத்தலங்களினதும் வரலாற்றுத் தொடக்கநிலை வேடர்களைக் கொண்டு முன்னெடுக்கப்படுவது கவனத்திற்குரியதாகும்.

வேடர்கள் இலிங்கம், வேல் வைத்து வழிபட்டதாக ஐதீகம் தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், மாமாங்கேஸ்வரர், மண்டூர் கந்தசுவாமி ஆலயம், சித்தாண்டி முருகன் ஆலயம், பழுகாம் விஷ்ணு ஆலயம் போன்றவற்றில் வேடர்களுக்கென்று வேட்டைத் திருவிழா, பூஜைகள் இடம்பெறுகின்றன.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரர் ஆலயத்தில் இடம்பெறும் கஞ்சிமுட்டி வழங்கும் நிகழ்வில் வேடர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். மயில் கட்டுத் திருவிழாவானது வேடர்களையும் குமார தெய்வத்தையும் தொடர்பு படுத்துவதாக சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிலில் 12 ஆம் நாள் திருவிழாவாக இடம்பெறுகின்றது. இதன்போது கோராவெளி, தரவைப்பகுதிகளில் வாழும் வேட குலத்தவர்கள் வாழைக்குலைகள், தேன், பச்சையரிசி, காய்கறிகள், மயிலிறகுக் கட்டுக்களையும் கொண்டுவருவர். மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் சுவாமி வீதி வலம் வரும் நிகழ்வின்போது வேடர் ஒருவர் கையில் வில்லம்பு ஏந்தியவாறு சுற்றுமுற்றும் பார்த்தவண்ணம் முன்னால் வருவார். மட்டக்களப்பு திராய்மடு வீரபத்தினியம்மன் ஆலயத்தின் பூஜைகள், மந்திரங்கள் என்பன வேட முறைகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. வேட குல வழிபாடாக குமார தெய்வ வழிபாடு நீண்ட காலமாக இடம்பெற்றிருக்கின்றது.

## 3. சமூகநிலை

வேடர்கள் நீர் நிலைகளை அண்மித்து வேட்டையாடல், மீன்பிடி, சேனைப் பயிர்ச்செய்கை போன்ற தொழில்களைச் செய்துள்ளனர். வேட்டையாடலின்போது பொறிவைத்தல், சுருக்கு வைத்தல், ஈட்டியெறிதல், படுகுழி வைத்தல், வில்லம்பு கொண்டு எய்தல் போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதேபோன்று மீன்பிடிப்பதற்கு நஞ்சடித்தல், கெந்து

மிதித்தல், நீர்கட்டி இறைத்தல், பறி வைத்தல், ஆமை குத்துதல், கரப்பு குத்துதல் போன்ற முறைகளைப் பயன்படுத்தியுள்ளனர். தேன் எடுத்தலின்போது தேனீக்கள் தக்காதவாறு மந்திரங்களையும், உத்திகளையும் கையாண்டுள்ளனர்.

திருணமானது கபுறா என்ற தலைவனின் கீழ் இடம்பெறும். சீதனமாக கத்தி, கோடரி, வேட்டைநாய், பதிய குடிசை என்பன வழங்கப்படும். தற்காலத்தில் தமிழர்களின் மரபான கலத்தில் போடலும் கலப்புற்றுள்ளது. வேடர்களிடையே ஒருவர் இறந்து விட்டால் அவர் தெய்வ நிலையை அடைந்துவிட்டார் என்ற நம்பிக்கையுண்டு. இவர்களிடையே காணப்படும் ''உத்தியாக்கள்'' வழிபாடு தக்க சான்றாகும்.

மட்டக்களப்பு தேசத்தில் ''வேடவேளாளர்'' , வாகரைப் பிரதேசத்தில் ''வெள்வேடர்'' போன்ற சமூகப் பிரிவுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவர்கள் பரம்பரை வேடர்களாகவிருந்து காலப்போக்கில் வேளாண் தொழிலை மேற்கொண்டவர்களென சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். வேடவேளாள சமூகத்தின் திருமண உறவுகள் வேளாள சமூகம் சார்ந்து அடைந்திருப்பது வேட வேளாளர் பிணைப்பை எடுத்துக் காட்டுகின்றது. மண்டூர், வெல்லாவெளி, பழுகாமம், கொக்கட்டிச்சோலை, சித்தாண்டி போன்ற கிராமங்களில் இதன் இறுக்கத்தை இன்றும் உணரமுடிகின்றது (வெல்லவூர்க்கோபால் 2005:112).

## 4. இடப்பெயர்களில் வேட செல்வாக்கு

பிரதேசங்களின் இடப்பெயர்களும் வேடத் தலைவர்களின் பெயர்களைக் கொண்டதாக மாற்றங்கண்டுள்ளது. பழுவன் என்ற வேட தலைவன் பழுவன்கமத்தை அமைத்ததாகவும் இப்பெயர் காலப்போக்கில் பழுகாமம் எனத் திரிபடைந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது (வேலழகன்.சி., 2008:24). கழுவன் என்பவனால் அமைக்கப்பட்ட குடியிருப்புக்களாக களுதாவளை, களுவாஞ்சிகுடி என்பன காணப்பட்டன. புலியன் என்பவன் வாழ்ந்த இடம் புளியந்தீவு எனப்பட்டது (நடராசா.F.X.C., 1980:11). மஞ்சன் வாழ்ந்த இடம் மஞ்சந்தொடுவாய் எனவும் இங்கு சேனை செய்த இடம் சேனைத்தெரு எனவும் அழைக்கப்படுகின்றது. கங்கன் இருந்த இடம் காங்கேயனோடை, காத்தான் இருந்த இடம் காத்தான் குடியிருப்பு, அலையன் வாழ்ந்த இடம் அலையன்குளம், ஆணையன் வாழ்ந்த ஆணைக்குளம், துரும்பன் இருந்த இடம் துரும்பங்கேணி, வெறியன் வாழ்ந்த இடம் வெறியன்சேனை என வேடர்களின் பெயரை நினைவுபடுத்துகின்றது.

ஓட்டமாவடியை அடுத்துள்ள பிரதேசம் வேடர்குடியிருப்பு என அழைக்கப்படுகின்றது. குறிஞ்சி நில வேடர் கூட்டமாக வாழ்ந்த குடியிருப்புக்களை குறிஞ்சியென அழைத்தனர். மட்டக்களப்பில் ஏறாவூர், களுதாவளை போன்ற கிராமங்களில் முதலாம் குறிச்சி, இரண்டாம் குறிச்சி, மூன்றாம் குறிச்சி என்பன இன்றும் இப்பகுதிகளில் வழக்கிலுள்ளன.

## 5. முடிவுரை

மட்டக்களப்பு பகுதியில் பூர்வீகக் குடிகளாக வேடர்களே வாழ்ந்துள்ளமைக்கு

இன்றும் சில பிரதேசங்களில் வாழ்கின்ற வேட வம்சாசழியினர் சான்றாகும். மட்டக்களப்பு பிரதேசத்தில் காணப்படுகின்ற புகழ்பெற்ற ஆலயங்கள் பலவற்றின் பூர்வீக வரலாறுகளும், அங்கு நடைபெறும் வேடர்களுடன் தொடர்பான சடங்கு முறைகளும் வேடர்கள் வாழ்ந்தமைக்குச் சான்றுகளாகும். மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஏனைய சாதியரிடையே பல குடிகள் காணப்படுவதைப்போன்று வேடர்களிடையேயும் சில குடிவகைகள் இனங்காணப்பட்டுள்ளன. வேட இனமென்று தம்மை அடையாளம் காணமுடியாதளவிற்கு ஏனைய குடிகளோடு தம்மை இணைத்துக்கொண்டு கலப்புற்று வாழ்கின்றனர். எனினும் முறுத்தானை, பால்ச்சேனை, பொண்டுகள் சேனை, காயங்கேணி, கோதாரிச்சேனை போன்ற இடங்களில் வாழ்பவரிடையே இன்றும் வேடச்சாயலின் பண்புகளைக் காணமுடிகின்றது.

மட்டக்களப்பு பிரதேசத்தின் ஆதிக்குடிகளாக வேட வம்சாவழியினர் வாழ்கின்றனர். இவர்கள் தமக்கென தனித்துவமான சமூக வழக்காறுகளைக்கொண்டு காணப்படுகின்றனர். இன்று நாகரீக வளர்ச்சி காரணமாக இவ்வேட சமூகத்தினரின் பாரம்பரிய வழக்காறுகள் மறைந்து வருகின்றன. நாகரிக மாற்றம் ஏற்பட்டபோதிலும் ஏனைய சமூகத்தினருடன் ஒப்பிடுகையில் இவர்கள் பின்தங்கிய சமூகத்தினராகவே காணப்படுகின்றனர்.

**உசாத்துணை**


1. வெல்லவூர்க்கோபால், 2005, மட்டக்களப்புத் தேசம், மனுவேதா வெளியீடு, மட்டக்களப்பு.
2. வாகரைவாணன், 2011, கிழக்கிலங்கைத் தமிழகம், மட்டக்களப்பு.
3. நடராசா.F.X.C., 1998, மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு கலாசாரப் பேரவை வெயியீடு, மட்டக்களப்பு.
4. நவநாயகமூர்த்தி.நா., 2002, ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள், வானதி வெளியீடு, அக்கரைப்பற்று.
5. Canagaratnam.S.O., 1921, Monography of the Batticaloa, Celom cey.
6. புஷ்பரட்ணம்.ப., ''மட்டக்களப்பில் வேடுவ சமூகம் வாழ்ந்த குகைகள் கண்டுபிடிப்பு'', வீரகேசரி, 2013.09.15